**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொள்ளாச்சி**
முன்னிலை : திரு.N.பாரதிராஜன், பி.ஏ., பி.எல்.,
**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, பொள்ளாச்சி**

2023 ம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 11 ஆம் நாள் வெள்ளிகிழமை
**இ.ம.எண்.07/2022 இன் இ.ம.எண்.03/2019 இன்**
**அ.வ.எண்.224/2019**

T.கோபால் ... மனுதாரர்/பிரதிவாதி

/ எதிர் /

M.ஈஸ்வரி ... எதிர்மனுதாரர்/வாதி

இம்மனுவானது கடந்த 02.08.2023 அன்று என் முன்பு இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.N.சுந்தரராஜன், அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.P.K.மயில்சாமி, அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பிலும் எடுத்துரைக்கப்பட்ட வாதங்களின்படியும், ஆவணங்களின்படியும், இந்நீதிமன்றம் இன்று வழங்கிடும் கீழ்க்கண்ட..

**ஆணையுரை**

நீதிமன்ற ஆணையர் அறிக்கைக்கு ஆட்சேபணை தாக்கல் செய்ய ஏற்பட்ட காலதாமதத்தை மன்னித்து ஆட்சேபணையை ஏற்க கோரி உரிமையியல் நடைமுறைச்சட்டம் பிரிவு 151–ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2) மனு சங்கதியின் சுருக்கம் :**

இம்மனுவின் மனுதாரர் அசல் வழக்கில் பிரதிவாதி ஆவார். எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கு சொத்தின் பௌதீக தன்மையை பார்வையிட்டு அறிக்கை தாக்கல் செய்திட வேண்டுமென தாக்கல் செய்த இ.ம.எண்.03/2019–ல் நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்யப்பட்டு, அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்யப்பட்டள்ளது. மேற்படி நீதிமன்ற ஆணையர் அறிக்கைக்கு ஆட்சேபணை தாக்கல் செய்ய வாய்தா போடப்பட்டது. அந்தசமயம் கோவிட்– 19 தொற்று

காரணமாக மனுதாரருக்கு உடல்நிலை சரியில்லாததால் தகுந்த நேரத்தில் ஆட்சேபணை தாக்கல் செய்ய முடியவில்லை. அதனால், மேற்படி மனுவிற்கு ஆட்சேபணை தாக்கல் செய்யவில்லை என்று நீதிமன்றத்தால் மனு முடித்துவைக்கப்பட்டது. தற்போது மனுதாரரின் உடல்நலம் சரியாகிவிட்டது. எனவே, மேற்படி நீதிமன்ற ஆணையர் அறிக்கைக்கு மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்ய இருக்கும் ஆட்சேபணையை ஏற்க கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3) <u>எதிருரை சங்கதியின் சுருக்கம்</u> :**

வழக்கில் ஆணையர் அவரது அறிக்கையை கடந்த 04.09.2019 அன்று தாக்கல் செய்தார். அதன்பின்பு கடந்த 23.09.2019 ம் தேதியிட்ட மனுவினை மனுதாரர் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்தார். அதற்குரிய ஆட்சேபணை ஸ்டேட்மெண்ட் தாக்கல் செய்திட வேண்டி, எதிர்மனுதாரருக்கு இந்நீதிமன்றத்தால் வாய்ப்பளிக்கப்பட்டது. அதன்படி கடந்த 01.07.2022 அன்று எதிர்மனுதாரர் தரப்பில் ஆட்சேபணை ஸ்டேட்மெண்ட் தாக்கல் செய்யப்பட்டது. அதில், மனுதாரர் ஆணையர் தாக்கல் செய்த அறிக்கைக்கு ஆட்சேபனை தாக்கல் செய்திடாமல், ஆணையர் நியமன மனுவைத் தாக்கல் செய்துள்ள செயல் தவறு என்று பதில் தாக்கல் செய்யதிருந்தார்.

**3.2)** எதிர்மனுதாரர் தரப்பில் பதில் தாக்கல் செய்த பிறகு 5 வாய்தாக்கள் கழித்து, விசாரணைக்காக மனுதாரர் தரப்பில் வாய்தா வாங்கப் பெற்று, 4 மாதங்கள் கழித்து பின் யோசனையாக மனுதாரர் தரப்பில் இம்மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதாவது ஆணையர் அறிக்கை தாக்கல் செய்யப்பட்டு, 38 மாதங்கள் கழித்து மட்டுமே மனுதாரர் தரப்பில் ஆட்சேபணை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதேசமயம் கோவிட்–19 காரணமாக ஆட்சேபணை தாக்கல் செய்ய இயலாம் போய்விட்டது என்று கூறுவது ஏற்புடைதல்ல. மேலும், மனுதாரர் ஆட்சேபணையை தாக்கல் செய்வதில் ஏற்பட்ட காலதாமதத்திற்கான

உரிய காரணங்கள் எதுவும் கூறப்படவில்லை. எனவே, இம்மனு எதிர்மனுதாரரின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யப்படவேண்டும்.

4) இரு தரப்பிலும் தாக்கல் செய்யப்பட்ட மனு மற்றும் எதிருரை பரிசீலனை செய்யப்பட்டது. இரு தரப்பிலும் எந்த ஒரு ஆவணமும் தாக்கல் செய்யப்படவில்லை.

5) இம்மனுவில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சினை என்னவெனில் இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதே.

6) <u>பிரச்சினை</u> :

இரு தரப்பிலும் எடுத்துரைக்கப்பட்ட சங்கதிகள் மற்றும் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனு மற்றும் எதிருரை ஆகியவற்றை இந்நீதிமன்றம் தீர பரிசீலனை செய்ததில், அசல் வழக்கில் இ.ம.எண்.03/2019−ல் தாக்கல் செய்யப்பட்ட நீதிமன்ற ஆணையாளர் அறிக்கைக்கு, மனுதாரர்/ பிரதிவாதி தரப்பில் ஆட்சேபணை தாக்கல் செய்வதில் ஏற்பட்ட காலதாமதத்தை மன்னித்து இம்மனுவுடன் தாக்கல் செய்திருக்கும் ஆட்சேபணையை ஏற்று உத்தரவிடுமாறு மனுதாரரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டது.

7) எதிர்மனுதாரர் தரப்பில், ஆணையர் அவரது அறிக்கையை கடந்த 04.09.2019 அன்று இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார் என்றும், ஆணையர் அறிக்கை தாக்கல் செய்யப்பட்டு 38 மாதங்கள் கழித்து மட்டுமே மனுதாரர் தரப்பில் ஆட்சேபணை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், அதேசமயம் கோவிட்−19 காரணமாக ஆட்சேபணை தாக்கல் செய்ய இயலாம் போய்விட்டது என்று கூறுவது ஏற்புடைதல்ல என்றும், மேலும், மனுதாரர் ஆட்சேபணையை தாக்கல் செய்ய முடியாததற்கான காலதாமதத்திற்கான தகுந்த காரணம் எதுவும் குறிப்பிடவில்லை என்றும், எனவே, இம்மனு எதிர்மனுதாரரின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்று எதிர்மனுதாரர் /வாதி தரப்பில் எதிர்வாதம் வைக்கப்பட்டுள்ளது.

**8)** மேற்படி வழக்கை பரிசீலனை செய்கையில், எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் வழக்குசொத்தினை பார்வையிட்டு அளந்து அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்வதற்காக மனு தாக்கல் செய்யப்பட்டு அந்த மனுவானது இ.ம.எண்.03/2019 என கோப்பிற்கு எடுக்கப்பட்டு, நீதிமன்ற ஆணையர் நியமிக்கப்பட்டு அவர் தனது அறிக்கையை கடந்த 04.09.2019 அன்று இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார் என்பது தெரியவருகிறது. இந்நிலையில் நீதிமன்ற ஆணையர் அறிக்கை தாக்கல் செய்யப்பட்டு நான்கு வருடங்களுக்கு பிறகு கோவிட்–19 தொற்று காரணமாக தனக்கு உடல்நிலை சரியில்லாமல் போனதால் தன்னால் நீதிமன்ற ஆணையர் அறிக்கைக்கு ஆட்சேபணை தெரிவிக்க முடியாமல் போய்விட்டது என்றும், ஆகவே தனது ஆட்சேபணையை ஏற்றுக்கொள்ளுமாறு மனுதாரர் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்.

**9)** இரு தரப்பிலும் சொல்லப்பட்ட சங்கதிகளை இந்நீதிமன்றம் நன்கு பரிசீலனை செய்ததில், மேற்படி நீதிமன்ற ஆணையர் ஆட்சேபணை தாக்கல்செய்ய மனுதாரருக்கு ஒரு வாய்ப்பு கொடுப்பதே நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்கும் என கருதியும், அவ்வாறு வாய்ப்பு கொடுக்கப்படுவதினால் எதிர்மனுதாரருக்கு பெருத்த இழப்பொன்றும் ஏற்படப்போவதில்லை என்று இந்நீதிமன்றம் கருதுகின்றது. எனினும், எதிர்மனுதாரருக்கு ஏற்பட்டுள்ள காலதாமதத்தை செலவுத்தொகை செலுத்துவதன் மூலம் ஈடு செய்ய வேண்டும்.

முடிவில், மனுதாரர்/பிரதிவாதி, எதிர்மனுதாரர்/வாதிக்கு செலவுத் தொகையாக ரூ.1000/– வரும் 28.08.2023 தேதியன்றோ அல்லது அதற்கு முன்போ செலுத்தும்பட்சத்தில், இம்மனு அனுமதிக்கப்படும். அழைக்க: 28.08.2023.

இவ்வாணையுரை என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்து பிழை நீக்கம் செய்ததை 2023ம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 11ம் நாளான இன்று அவையறிய பகரப்பட்டது.

**(ஒப்பம்)/- N. பாரதிராஜன்**
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பொள்ளாச்சி.

**<u>மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் தரப்பில் குறியீடு செய்யப்பட்ட சாட்சி மற்றும் சான்றாவணங்கள்</u>:**

- இல்லை. -

**(ஒப்பம்)/- N. பாரதிராஜன்**
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பொள்ளாச்சி.

--------------------------------------------

<u>அசல் ஆணையுரை</u>
ஐ.ஏ.07/2022 இன் ஓ.எஸ்.224/2019
நாள் : 11.08.2023
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்
பொள்ளாச்சி

--------------------------------------------